[2024 பிப்ரவரி 21

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 40, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

40—

அறிவியல் ஆய்வகம்

***78461—டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், முள்ளிக்குளம் கிராமம், பாண்டியக்கோனார் அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைகள் மற்றும் அறிவியல் ஆய்வகம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக தாய்மொழி தினமான இன்று, புதுமைப் பெண்ணின் தாயாக, தமிழ்ப் புதல்வரின் தந்தையாக, ஊரகப் பகுதியைச் சார்ந்திருக்கின்ற, அரசு உதவி பெறுகின்ற பள்ளிகளிலும், காலை உணவு வழங்கப்படும் என்று சொன்ன தாயுமானவராக, (மேசையைத் தட்டும் ஒலி) 'தடைகளைத் தாண்டி வளர்ச்சியை நோக்கி' என்ற வகையில் நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் தாக்கல் செய்திருக்கின்ற நிதிநிலை அறிக்கையில், சட்டமன்ற வரலாற்றிலேயே அதிகப்படியாக 44,042 கோடி ரூபாயை (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய பள்ளிக் கல்வித் துறைக்கு வழங்கியதற்கு, ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் சார்பாக எங்களுடைய நன்றியை நம்முடைய மாண்புமிகு தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கின்றேன்.*

முற்பகல் 11–25

என்னுடைய பதிலைத் தொடங்குவதற்கு முன்பாக, என்னுடைய தொகுதி சார்ந்த ஒரு பிரச்சினையை நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர நான் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய தொகுதியில் இருக்கின்ற துவாக்குடியிலிருந்து

2024 பிப்ரவரி 21]

விமான நிலையம் வரை செல்கின்ற அரை வட்டப் பகுதியில் இருக்கின்ற, NHAI *மூலமாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற* Toll Gate-*ன்மூலம் வசூல் செய்கின்ற பணியில் இன்றைக்கு ஒன்றிய அரசு இறங்கியிருக்கிறது. இன்னும் இரண்டு நாட்களில் மாற்றுக் கட்சியைச் சார்ந்திருக்கின்றவர்கள் ஓர் ஆர்ப்பாட்டம் நடத்த இருப்பதாக நான் கேள்விப்பட்டேன். மாற்றுக் கட்சியாக இருந்தாலும், அவர்களும் எங்களுடைய தொகுதி மக்கள்தான் என்கின்ற வகையில், அதை உடனடியாகத் தடுத்து நிறுத்துகின்ற பணியில் நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்* NHAI-*யைச் சார்ந்திருக்கின்ற அதிகாரிகளிடம் எடுத்துச் சொல்ல வேண்டும் என்கின்ற வேண்டுகோளை வைக்கிறேன். தங்களது அனுமதியோடு விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) தென்காசி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், முள்ளிக்குளம் கிராமத்திலுள்ள பாண்டியக்கோனார் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு, தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து இரண்டு வகுப்பறைகள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும், மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப கூடுதலாக 4 வகுப்பறைகள் மற்றும் மேல்நிலை வகுப்புகளுக்கு 2 அறிவியல் ஆய்வகங்கள் அமைக்க அரசாணைகள் வெளியிடப்பட்டு, வரும் கல்வியாண்டிலே நபார்டு வங்கிமூலம் நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. சின்னப்பா அவர்கள்.*

திரு. கு. சின்னப்பா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். தென்காசி மாவட்டம், வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதியிலுள்ள, புளியங்குடி–சங்கரன்கோவில் மாநில நெடுஞ்சாலையின் அருகில் முள்ளிக்குளம் என்ற ஊரில் ஓர் ஆரம்பப் பள்ளி, நினைவில் வாழும் திரு. பாண்டியக்கோனார் அவர்கள் பெயரில் அவர் தம்பி திரு. இராமசாமி கோனார் அவர்களால் துவக்கப்பட்டு, பின்பு அது நடுநிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தப்பட்ட நிலையில், 1962 ஆம் ஆண்டில் அரசிடம் ஒப்படைக்கப்பட்டு, 1963 ஆம் ஆண்டில்*

அரசு உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தப்பட்டது. பள்ளியை ஒப்படைக்கும்போதே பள்ளியைச் சார்ந்த 5 ஏக்கர் நிலமும், பள்ளிக் கட்டடமும் தானமாக அரசிடம் ஒப்படைக்கப்பட்டன. அதன் பின்பு, 2008 ஆம் ஆண்டில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் அந்தப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தப்பட்ட நிலையில், 2017 ஆம் ஆண்டில், 9 வகுப்பறை கட்டடங்களும், ஓர் அறிவியல் ஆய்வுக்கூடக் கட்டடமும் இடிக்கப்பட்டன. இடிக்கப்பட்ட கட்டடங்களுக்குப் பதிலாக, இதுவரை புதிய கட்டடங்கள் கட்டப்படவில்லை. மேல்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தப்பட்ட பின்பு, அதற்குரிய போதிய வகுப்பறை கட்டடங்களும், அறிவியல் ஆய்வகங்களும் இல்லை. இப்பள்ளியில் முள்ளிக்குளத்தைச் சுற்றியிலுள்ள 15–க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சார்ந்த, ஏழையெளிய, விவசாய வீட்டுப் பிள்ளைகள் படிக்கின்றனர். ஆண்கள் 176 பேரும், பெண்கள் 110 பேரும் என 286 மாணவ, மாணவிகளும், 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை படித்துக் கொண்டிருக்கின்றனர். அவர்களைப் பயிற்றுவிப்பதற்கு தலைமையாசிரியர் உட்பட 18 ஆசிரியர்களும், பிற பணியாளர்கள் 3 பேரும் பணிபுரிகின்றனர். போதிய அறிவியல் ஆய்வகக்கூடமும், கூடுதல் வகுப்பறைக் கட்டடங்களும் இருந்தால், ஆங்கில வழிக் கல்வி கற்பதற்கும் அங்கே மாணவ, மாணவியர் சேருவார்கள். ஆகவே, இப்பள்ளிக்குத் தேவையான அறிவியல் ஆய்வகக் கட்டடங்களும், கூடுதல் வகுப்பறைக் கட்டடங்களும் கட்டித்தர வேண்டுமென்று தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டடம் கட்டப்பட்டு வருவதாகச் சொன்னார். அதற்கான ஏற்பாடுகளைச் செய்ததற்கு தொகுதி மக்களின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி. மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) சொல்லிவிடுங்கள்.

திரு. கு. சின்னப்பா: வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதியிலுள்ள கரிவலம்வந்தநல்லூர் அரசினர் அ. மருதப்ப செட்டியார் மேல்நிலைப் பள்ளிக்கு அறிவியல் ஆய்வுக் கூடங்களும், கூடுதல் வகுப்பறைக் கட்டடங்களும் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

2024 பிப்ரவரி 21]

அதேபோல, புளியங்குடியிலுள்ள அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் சிதிலமடைந்த பழங்காலக் கட்டடத்தை, பழமைமாறா வடிவத்தில் சீரமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இப்பள்ளியின் பழமைவாய்ந்த கட்டடங்கள் கருங்கல்லால் கட்டப்பட்டன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகையினால், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அந்த பள்ளிக் கட்டடத்தைச் சீரமைக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுறுத்தலின்படி, பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக கிட்டத்தட்ட 7,500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஆட்சிமாற்றம் ஏற்பட்ட இந்த ஐந்து ஆண்டுகளில் சுமார் 18 ஆயிரம் வகுப்பறைகள் மற்றும் கழிவறைகள் கட்டி முடிக்கப்பட வேண்டுமென்று திட்டமிட்டு, இதுவரைக்கும் 3,601 வகுப்பறைகள் (மேசையைத் தட்டும் ஒலி), 21 ஆய்வகங்கள், 184 யூனிட் கழிப்பறைகள், 700 மீட்டர் சுற்றுச் சுவர், கலைஞர் நூற்றாண்டு நூலகம் உள்ளிட்ட ஐந்து நூலகங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அதைப்போன்று, பள்ளிகள் மற்றும் வகுப்பறைகளுக்கு, நூலகங்களுக்கு மதிப்பீடு என்று மொத்த மதிப்பீடாக சுமார் 2,080 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. நான் ஏற்கெனவே சொன்னதைப்போன்று, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டபடி, இந்தக் கல்வியாண்டிலே நபார்டு வங்கி மூலமாக, அதைக் கண்டிப்பாக நாங்கள் கட்டித்தருவோம். அதுமட்டுமல்லாமல், பழமைவாய்ந்த கட்டடங்களைப்பற்றி சொன்னார்கள். கடந்த ஆண்டே, 100 ஆண்டுகளைக் கடந்திருக்கின்ற ஐந்து பள்ளிக் கட்டடங்களுக்கு தனியாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதற்கான பராமரிப்பு பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த முறை எடுக்கின்ற 5 பள்ளிகளில், கண்டிப்பாக நீங்கள் சொல்கின்ற அந்தப் பள்ளிக்கூடத்தையும் நாங்கள் எடுத்துக்கொள்கின்றோம். அதுமட்டுமல்லாமல், 3,600 வகுப்பறைகள், 105 ஆய்வகங்கள், 191 கழிப்பறைகள், 2,100 மீட்டர் சுற்றுச் சுவர், 5 மாணவர்

விடுதிகள், 5 மாணவியர் விடுதிகள் ஆகியன இப்பொழுது கட்டப்பட்டு வருகின்றன. இந்தக் கல்வியாண்டிலேயே நீங்கள் கேட்கக்கூடிய கோரிக்கையும் கண்டிப்பாக நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–30

(ஆ) உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்ட உடுக்குறியிட்ட வினாக்கள் (பட்டியல்கள் 3 முதல் 7 வரை)@

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

3. உலக தாய்மொழி நாள்–உறுதிமொழி எடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இன்று உலக தாய்மொழி நாள். உலகெங்கும் உள்ள மக்களுக்கு முக்கியமானதும், அவர்களுடைய மனதிற்கு நெருக்கமானதும் ஒன்று உண்டென்றால், அது அவர்களுடைய தாய்மொழிதான். அந்தவகையில், உலகமொழிகளில் தொன்மை வாய்ந்ததும், முதன்மையானதுமான செம்மொழியாம் நம் தாய்மொழி தமிழ்மொழியைப் போற்றி வணங்கும் வகையில் நாம் அனைவரும் எழுந்து நின்று, பின்வரும் உறுதிமொழியை எடுத்துக்கொள்வோம் என்பதை பேரவையின் அனுமதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். நான் உறுதிமொழி வாசகங்களை படிக்க படிக்க மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் திரும்பச் சொல்லுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.*

“எங்கும் தமிழ்
எதிலும் தமிழ்
எப்போதும் தமிழ்
என்ற நடைமுறையைக்
கொண்டுவரப் பாடுபடுவோம்.

@ 327 முதல் 675 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.